**நாகப்பட்டினம் நகராட்சி**

2024-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ஆம் நாள் புதன் கிழமை காலை 5.30 மணியளவில்

நடைபெற்ற நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கை தீர்மான நகல்

<table>
<tr><th>கூட்ட நடைபெற்ற நாள்</th><th colspan="3">வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம்</th><th>தீர்மான எண்</th></tr>
<tr><td rowspan="2">11–12–2024</td><td colspan="3">பொருள் எண்.1<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நாகூர் தைக்கால் தெருவில் தமிழ் இசைக்கு, திரை இசைக்கும், இறை இசைக்கும் 90 வயது வரை தொண்டாற்றிய இசை முரசு நாகூர் E.M ஹனிபா அவர்கள் பிறந்த வளர்ந்த பகுதியாகும். அவர் பிறந்த நூற்றாண்டு விழா வருகிற டிசம்பர் மாதம் 25 ஆம் தேதி தொடங்குகிறது. அன்னாரை நினைவு கூர்ந்து பெருமை சேர்க்கும் வகையில் அன்னார் அவர்கள் பிறந்த தைக்கால் தெரு பகுதியை இனிவரும் காலங்களில் இசை முரசு நாகூர் E.M ஹனிபா தைக்கால் தெரு என அழைக்கவும். நாகூர் சில்லடி கடற்கரை செல்லுகிற வழியில் தமிழ்நாடு அரசு 2023–2024 ஆண்டு மூலதன மானிய நிதியின் கீழ் அமைக்கப்படும் சிறுவர் விளையாடும் இடம் மாற்றும் பூங்கா பகுதியை இசை முரசு நாகூர் E.M ஹனிபா நூற்றாண்டு நினைவு பூங்கா என பெயர் சூட்ட நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td><td rowspan="2">தீர்மானம் எண். 319<br>நாகூர் தைக்கால் தெருவுக்கு இசை முரசு நாகூர் E.M ஹனிபா தைக்கால் தெரு என வைக்கவும் நாகூர் சில்லடி கடற்கரை செல்லுக்கர வழியில் அமைய உள்ள சிறுவர் விளையாட்டு பூங்காவிற்கு இசை முரசு நாகூர் E.M ஹனிபா நூற்றாண்டு நினைவு பூங்கா என பெயர் சூட்டவும் மன்றம் ஏக மனதாக தீர்மானிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>அலுவலககுறிப்பு</td><td>1</td><td>இப்பொருள் குறித்து நகர்மன்றத்தில் பொருள் வைத்து ஒப்புதல் பெற அரசு முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல்துறை அவர்களின் கடித எண்.8907/ந.நி5(2)2024 –ஐ நாள்.10.12.2024 அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றம் முடிவு செய்யலாம்.</td></tr>
</table>

/உண்மை நகல்/

(ஒம்) இரா,மாரிமுத்து

நகர்மன்ற தலைவர்

**நாகப்பட்டினம் நகராட்சி**

2024-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் நாள் செவ்வாய்கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கை தீர்மான நகல்

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 31.12.2024 | **பொருள் எண்.1**<br>அருளிசை அரசு, இசை முரசு என மக்கள் கொண்டாடிய குரலுக்கு சொந்தக்காரர் மறைந்தும் மக்கள் மனதில் வாழும் கலைமாமணி நாகூர் EM. ஹனிபா அவர்களை பெருமைப்படுத்தும் விதமாக நாகூர் கடற்கரையில் அமையவிற்கும், சிறுவர் பூங்காவிற்கும், அவர்கள் வாழ்ந்த தைக்கால் தெருவிற்கும் இசை முரசு EM. ஹனிபாவின் பெயர் சூட்டி அரசாணை வெளியிட்ட திராவிட மாடல் அரசை வழிநடத்தும் தமிழகத்தின் தன்னிகரில்லா தளபதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் சின்னவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், நாகப்பட்டினம் மாவட்ட பொறுப்பு அமைச்சர் மாண்புமிகு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கும், தமிழக மீன்வளர்ச்சி கழக தலைவர் திரு.என்.கௌதமன் அவர்களுக்கும், நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆளுர்ஷநவாஸ் அவர்களுக்கும், நாகப்பட்டினம் நகராட்சி சார்பில் இம்மன்றத்தின் வாயிலாக எங்கள் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவிக்ககோரும் தீர்மானம். | தீர்மானம் எண். 320<br>மன்றத்தின் நன்றி தெரிவிக்கப்பட்டது |
| | **பொருள் எண்.2**<br>நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் அவர்களின் நவம்பர் 2024 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும். | தீர்மானம் எண். 321<br>பதிவு செய்யப்பட்டது |
| 31.12.2024 | **பொருள் எண்.3**<br>நாகப்பட்டினம் நகராட்சி அலுவலக வளாகத்திலுள்ள பயன்படுத்தப்பட்டு வரும் கணினி மற்றும் கணினி தொடர்பான சாதனங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தி இயக்கும் யூபிஎஸ் பேட்டரி பழுதடைந்துள்ளது. எனவே, மேற்படி பேட்டரியினை உடன் புதியதாக மாற்றம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. எனவே, மேற்காணும் பணியினை மேற்கொள்வதற்குண்டான உத்தேச செலவினத் தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு<br>1 மேற்காணும் பொருள் தொடர்பான செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்காணும் பணியின் அவசர அவசியத்தினை கருதி விலைப்புள்ளிகள் பெற்று தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்கும் மன்றம் அனுமதி | தீர்மானம் எண். 322<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | வழங்கலாம்.<br>ந.க.எண். 2064/2024/இ1 | |
| 31.12.2024 | **பொருள் எண். 3**<br>நாகப்பட்டினம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 1836/2024/பி1 நாள் 29.11.2024ன்படி தஞ்சாவூர் மண்டல அளவில் உள்ள 19 எண்ணிக்கையிலான நகராட்சிகளில் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் மற்றும் சேவைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருவதனை பொது மக்கள் அறிந்து கொள்ளும் விதமாக ஒன்றிய மற்றும் மாநில அரசின் திட்டங்களின் செயல்பாடுகள் நகர்புற உள்ளாட்சிகளில் தினசரி வழங்கப்படும் சேவைகளை குடிநீர் விநியோகம், பொதுசுகாதாரம் முதலானவற்றை சமூக வளைதளங்களான படவரி (Instagram) முகநூல் (Face Books) மற்றும் (Twitter) ஆகியவற்றின் மூலம் டிசம்பர் 2024 மாதம் முதல் 10 மாதங்களுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியினை மேற்கொள்ள மண்டல அளவில் ஒருங்கிணைந்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் மற்றும் வேலை உத்தரவும் வழங்கப்பட்டுள்ளது.மேற்காணும் விழிப்புணர்வு ஏற்படுத்தும பணியினை மேற்கொள்ள மண்டல அளவில் உள்ள நகராட்சிகளின் நிலையினை பொறுத்து ஒப்பந்தப்புள்ளிக்குரிய தொகையினை விடுவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், நாகப்பட்டினம் நகராட்சி தேர்வு நிலை நகராட்சி என்பதால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தொகை ரூ.60000/-னை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் கணக்கிற்கு செலுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்காணும் சேவைகளை சமூக வலைதளங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு உண்டான கட்டணத்தினை செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்காணும் பொருள் தொடர்பான செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 4342/2024/இ1 | தீர்மானம் எண்.323<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது. |
| 31.12.2024 | **பொருள் எண். 4**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் சில்லடி பீச்சில் அமைந்துள்ள பூங்காவை மேம்படுத்துவதற்கு அங்குள்ள பழுதடைந்த சுற்றுச்சுவர் மற்றும் சேதமடைந்த தரைதளத்தை அப்புறப்படுத்தவும் தயாரிக்கப்பட்ட உத்தேச ஏலத்தொகை ரூ.15000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்காணும் பொருள் தொடர்பான செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 79/2024/இ1 | தீர்மானம் எண்.324<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 31.12.2024 | **பொருள் எண்.5**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 18 வரையிலான பகுதியில் உள்ள பாதாளசாக்கடை இயந்திர குழிகளை (Machine Hole) சாலை பகுதியில் தாழ்வாக உள்ளதை சாலை மட்டத்திற்கு உயர்த்தி அமைக்கவும், Machine Holeல் உள்ள பழுதடைந்த Machine Hole cover slob & Ring ஆகியவற்றை புதியதாக மாற்றி அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதிக்கலாம்<br>2 மேற்காணும் பொருள் தொடர்பான செலவினத்தினை நகராட்சியின் பாதாளசாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.79/2024/இ1 | தீர்மானம் எண்.325<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |
| 31.12.2024 | **பொருள் எண்.6**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19 முதல் 36 வரையிலான பகுதியில் உள்ள பாதாளசாக்கடை இயந்திர குழிகளை (Machine Hole) சாலை பகுதியில் தாழ்வாக உள்ளதை சாலை மட்டத்திற்கு உயர்த்தி அமைக்கவும், Machine Holeல் உள்ள பழுதடைந்த Machine Hole cover slob & Ring ஆகியவற்றை புதியதாக மாற்றி அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் முன் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்காணும் பொருள் தொடர்பான செலவினத்தினை நகராட்சியின் பாதாளசாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.79/2024/இ1 | தீர்மானம் எண்.326<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |
| 31.12.2024 | **பொருள் எண்.7**<br>நாகப்பட்டினம் நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைபணி மற்றும் பொதுசுகாதார பணியின்கீழ் வீடுதோரும் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து மக்கும் குப்பைகளை அந்தந்த MCC -இல் நுண்உரம் தயாரிப்பதற்கு பயண்பாட்டில் இருந்து வரும் அரவை இயந்திரம் (Shredding Machine) பழுது ஏற்பட்டுள்ள நிலையில் அதனை பழுது நீக்கம் செய்வதற்கு நகராட்சியின் பொதுநிதியில் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதாரபணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மானம் எண்.327<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | ந.க.எண் 4474/2024/எச்1 | |
| 31.12.2024 | **பொருள் எண்.8**<br>நாகப்பட்டினம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் பொதுசுகாதார பணியின் கீழ் தினசரி வீடுதோறும் சேகரமாகும் மக்கும் குப்பைகள் நாகூர், அரசு மருத்துவமனை பின்புறம் மற்றும் கோட்டைவாசல் ஆகிய நுண்உரம் தயாரிக்கும் செயலாக்க மையங்களில் தினசரி சேகரமாகும் குப்பைகளை அளவீடு செய்வதற்கு மூன்று எண்ணிக்கை எடைப்போடும் இயந்திரம் (Weighing Machine-Digital Reader) உத்தேச செலவினம் ரூ.36000/-க்கு நகராட்சி பொது நிதியிலிருந்து தருவித்து கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு \| 1 \| மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். /எச்1 | தீர்மானம் எண்.328<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது. |
| 31.12.2024 | **பொருள் எண்.9**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு மற்றும் ஒன்பதாண்டு குத்தகை இனங்களுக்கு உரிமம் வழங்குவதற்கு 24.09.2024 ஆம் தேதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஓராண்டு குத்தகை இனமான நாகப்பட்டினம் பாரதி நாளங்காடி இறைச்சி கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கான ஏலத்தில் ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.ஆர்.பிரதாப் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியினை ஏற்று 30.09.2024 ஆம் தேதிய இந்நகர்மன்ற கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் திரு.ஆர்.பிரதாப் என்பவருக்கு உரிமத்தொகை மற்றும் முன்வைப்புத்தொகையினை செலுத்தகோரி அறிவிப்பு அனுப்பப்பட்டதில் உரிமத்தொகை மற்றும் முன்வைப்புத்தொகையினை இதுநாள் வரை செலுத்தவில்லை. எனவே மேற்கண்ட குத்தகை இனத்தினை மறு ஏலம் விடவும் அவர்களால் செலுத்தப்பட்ட ஏல வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.20,000/ஐ. பறிமுதல் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலககுறிப்பு \| 1 \| மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.2613/2024/அ1 | தீர்மானம் எண்.329<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது. |
| 31.12.2024 | **பொருள் எண்.10**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு மற்றும் ஒன்பதாண்டு குத்தகை இனங்களுக்கு உரிமம் வழங்குவதற்கு 23.11.2023 ஆம் தேதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைப்பெற்றது. அதில் ஆசாத் மார்க்கெட் கடை எண்.14-க்கு திரு.செய்யது அப்துல் காதர் என்பவரால் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரப்பட்டது. ஆசாத் மார்க்கெட் கடை எண்.15-ன் ஏலதாரரான | தீர்மானம் எண்.330<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது.<br>.<br>. |

| | | |
|---|---|---|
| | திரு.மணவாளன் என்பவர் கடை எண்.14ஐ உடைத்து சட்டர் அமைத்தது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதால் ஆசாத் மார்க்கெட் கடை எண்.14-க்கான உரிமத்தொகையினை செலுத்தவில்லை. எனவே திரு.செய்யது அப்துல் காதர் என்பவர் ஏலத்தில் கலந்துக்கொள்வதற்கு செலுத்தப்பட்ட வைப்புத்தொகை ரூ.3,00,000/ஐ திரும்ப வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலககுறிப்பு — 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண்.4370/2017/அ1 | |
| 31.12.2024 | **பொருள் எண்.11**<br><br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 22 அரியபத்திரப்பிள்ளைத் தெரு மற்றும் பப்ளிக் ஆபிஸ் சாலையில் அமைந்துள்ள சாலையின் குறுக்கே சிறுபாலம் அமைத்து மழைநீர் தேங்காத வண்ணம் அமைப்பு அமைப்பதற்குண்டான உத்தேச மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலக குறிப்பு — 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்காணும் பொருள் தொடர்பான செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.79/2024/இ1 | தீர்மானம் எண்.331<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது.<br>.<br>. |
| 31.12.2024 | **பொருள் எண்.12**<br><br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 33-ல் அக்கரைக்குளம் கீழ்கரை அக்கரைக்குளம் வடக்கு ரோடு மற்றும் அக்கரைக்குளம் வடகரை ஆகிய மழைநீர் வடிகால் பகுதியில் மழைநீர் தேங்காமல் செல்வதற்கு சிறுபாலங்கள் அமைக்க மழைநீர் தேங்காத வண்ணம் அமைப்பு அமைப்பதற்குண்டான உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு — 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்காணும் பொருள் தொடர்பான செலவினத்தினை நகராட்சியின் பாதாளசாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண்.79/2024/இ1 | தீர்மானம் எண்.332<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது |

| 31.12.2024 | பொருள் எண்.13 | தீர்மானம் எண்.333 |
|---|---|---|

**பொருள் எண்.13**

வருகின்ற நாகூர் கந்தூரி திருவிழாவினை முன்னிட்டு கொடி ஊர்வலம் மற்றும் சந்தனக்கூடு ஊர்வலத்திற்கு வரும் யாத்திரீர்களுக்கான முன்னேற்பாடு நடவடிக்கைகள் நாகப்பட்டினம் நகராட்சியில் பொது நிதி – 2024-25ன் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு 28.11.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1. | நாகூர் பகுதியில் கொடி ஊர்வலம் மற்றும் சந்தக்கூடு செல்லும் சாலைகளில் தார் மற்றும் சிமெண்ட் பேட்ச் மேற்கொள்ளும் பணி. | 4.00 | பி.சிவசக்தி ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | 0.08% | - |
| | | | கே.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | - | 1.10% |
| 2 | நாகப்பட்டினம் பகுதியில் கொடி ஊர்வலம் மற்றும் சந்தக்கூடு செல்லும் சாலைகளில் தார் மற்றும் சிமெண்ட் பேட்ச் மேற்கொள்ளும் பணி. | 4.00 | கே.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | 0.09% | - |
| | | | எஸ்.சத்தியநாரயணன்,ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | - | 1.20% |
| 3 | நாகூர் தர்காவிற்கு வருகை புரியும் யாத்திரீர்களை கண்காணிக்கும் மருத்து குழுவிற்கு தற்காலிகமாக தேவையான சியாமியான பந்தல், டேபிள் சேர்கள், | 6.25 | பி.சிவசக்தி ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | - | 1.10% |
| | | | எஸ்.சத்தியநாரயணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | 0.07% | - |

அ.கு,
அனுமதிக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தற்காலிக கலிவறைகள் மற்றும் விளக்கு வசதிகள் செய்யும் பணி. | | | | |
| 4 | நாகப்பட்டினம் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய மைதானத்தில் வாகனம் நிறுத்துமிடத்திற்கு தற்காலிக கழிவறை மற்றும் பிளெக்ஸ் பேனர்கள் அமைக்கும் பணி. | 1.75 | பி.ரகுநாதன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | 0.06% | - |
| | | | கே.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | - | 1.20% |
| 5 | நாகப்பட்டினம் அரசினர் தொழிற் பயிற்சி நிலைய மைதானம், வெட்டாற்றின் அருகில் மற்றும் மாடர்ன் மெட்ரிக்குலேசன் பள்ளி மைதானத்தில் வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கும் பணி. | 7.00 | பி.சிவசக்தி ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | 0.06% | - |
| | | | கே.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | - | 1.10% |
| 6 | நாகூர் பகுதியில் Mobile Toiletகள் (20 இடங்களில்) அமைக்கும் பணி. | 2.30 | எஸ்.கருணாநிதி ,ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | 0.08% | - |
| | | | கே.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | - | 1.30% |
| 7 | நாகூருக்கு வருகைப்புரியும் யாத்திரீர்களுக்கு | 2.00 | எஸ்.சத்தியநாராயணன், ஒப்பந்ததாரர், | 0.06% | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | குடிநீர் விநியோக அமைப்பு அமைக்கும் பணி. | | நாகப்பட்டினம். | | |
| | | | பி.சிவசக்தி ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | - | 1.40% |
| 8 | நாகூர் நகர் பகுதிகளில் எல்இடி விளக்கு அமைப்புகள் விநியோகம் செய்யும் பணி. | 2.00 | எஸ்.கருணாநிதி ,ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | 0.08% | - |
| | | | கே.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | - | 1.10% |
| 9 | நாகூர் பேருந்து நிலையம், யானைக்கட்டி முடுக்கு மற்றும் தர்கா குளம் கீழ்கரை பகுதியிலுள்ள (5 எண்ணிக்கைகள்) கழிவறைகளை பழுது நீக்கம் செய்யும் பணி. | 3.00 | எஸ்.கருணாநிதி ,ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | 0.07% | - |
| | | | கே.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | - | 1.20% |

மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப் புள்ளி அளித்து உள்ள ஒப்பந்ததாரர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப் புள்ளி அளித்து உள்ள ஒப்பந்ததாரர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அனுமதி வழங்கலாம். |
| | 3 | மேற்காணும் பணிகளுக்கு பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தை இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் |
| | 4 | மேற்காணும் பணி அவகர அவசியத்தினை கருத்தில் கொண்டு உடன் பணியினை மேற்கொள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |

31.12.2024

## பொருள் எண்.14

நாகப்பட்டினம் நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 – எட்டாவது மாநில உயர் அதிகார குழுவின் கூட்ட நடவடிக்கை நாள் 24.07.2024ன் படி கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து கீழ்கண்ட பணிகளுக்கு 29.11.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு

| வ, எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1. | நாகூர் சில்லடி கடற்கரையில் பொது கழிப்பிடம் கட்டும் பணி. | 36.28 | ஜே.ஜேசு, ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | 0.01 | - |
| | | | ஆர்.ராஜேந்திரன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் மாவட்டம், ஆயக்காரன்புலம், வேதாரண்யம். | - | 0.56 |
| 2 | நாகப்பட்டினம் பெரியக்கடைத்தெரு பொது கழிப்பிடம் புதியதாக கட்டும் பணி. | 10.60 | எஸ்.சத்யநாராயணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | 0.09 | - |
| | | | கே.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | - | 1.15 |
| 3 | நாகப்பட்டினம் புதிய நம்பியார் நகரில் உள்ள | 4.50 | ஜே.ஜேசு, ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | 0.05 | - |

தீர்மானம் எண்.334
பதிவு செய்யப்பட்டது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பொது கழிப்பிடத்தை மறுசீரமைப்பு செய்யும் பணி. | | மெர்சஸ்.டெல்டா இன்ஜினியரிங் சர்வீஸ், நாகப்பட்டினம். | - | 1.36 |

மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப் புள்ளி அளித்து உள்ள ஒப்பந்ததாரர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று உடன் பணி உத்தரவு வழங்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கு, பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | மேற்காணும் பணிக்கு திட்டப்பணியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அரசு மானிய நிதிபோக மீதமுள்ள தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம் |

ந.க.எண். 5137/2022/இ1,

31.12.2024

**பொருள் எண்.15**

நாகப்பட்டினம் நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 – திடக்கழிவு மேலாண்மையின் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 6450/2022/எஸ்பிஎம்1 நாள் 25.09.2024ல் நிர்வாக அனுமதி மற்றும் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து கீழ்கண்ட பணிகளுக்கு 28.11.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ, எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1. | Providing composting solution for wet waste of capacity 10 TPD pre composter within built shredder | 147.60 | M/s Saram Enviro Service (P) Ltd.,A5, 11/2 2nd Floor, Bheema Seena Garden St Mylapore, Chennai – 600 004. | 6.65 | - |

தீர்மானம் எண்.335

அ.கு.

அனுமதிக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | required bio culture and 1000 pads/masks per capacity Electrical Incinerator. | | M/s Envirosome Solutions (P) Ltd.,4 Ananda nagar main road, Kosakulam, Madurai – 625 017. | 7.25 மிகக் குறைவு | - |

. மேற்கண்ட திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டைவிட மிகக்குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள " M/s Envirosome Solutions (P) Ltd., Madurai, நிறுவனத்தின் மிகவும் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று உடன் பணி உத்தரவு வழங்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கு, பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | மேற்காணும் பணிக்கு திட்டப்பணியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அரசு மானிய நிதிபோக மீதமுள்ள தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். |

ந.க.எண். 5137/2022/இ1,

31.12.2024

**பொருள் எண்.16**

நாகப்பட்டினம் நகராட்சிக்கு 15-வது நிதிக்குழு சுகாதாரமானியம் 2023-24ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 22441/2023/இஏ2 நாள் 19.11.2024ல் நிர்வாக அனுமதி மற்றும் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து கீழ்கண்ட பணிகளுக்கு 18.12.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு

| வ, எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1. | நாகப்பட்டினம் மருந்துக்கொத்தளம் சாலையிலுள்ள நகர்புற ஆரம்ப சுகாதார மையத்தில் புதியதாக கட்டிடம் கட்டும் பணி. | 120.00 | என்.செந்தில் குமார், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | 0.03 | - |
| | | | ஜே.ஜேசு, ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | - | 0.65 |

தீர்மானம் எண்.336
அ.கு. பதிவு செய்யப்பட்டது.

மேற்கண்ட திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டைவிட 0.03 குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ” திரு.என்.செந்தில் குமார், ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று உடன் பணி உத்தரவு வழங்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கு, பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். |
|---|---|---|

ந.க.எண். 5058/2023/இ1

31.12.2024

## பொருள் எண்.17

நாகப்பட்டினம் நகராட்சிக்கு மாநில நிதிக்குழு ஊக்கநிதி திட்டம் 2024-25ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 23045/2023/எஸ்எஸ்2 நாள் 27.11.2024ல் நிர்வாக அனுமதி மற்றும் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து கீழ்கண்ட பணிகளுக்கு 18.12.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ, எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1. | நாகப்பட்டினம் அவுரித்திடலில் பொது மேடையினை சுற்றிச்சுவர் அமைக்கும் பணி. | 66.00 | ஆர்.ராஜேந்திரன், ஒப்பந்ததாரர், ஆயக்கான்புலன், வேதாரண்யம், நாகப்பட்டினம் மாவட்டம். | 0.05 | - |
| | | | டெல்டா இன்ஜினியரிங் சர்வீஸ், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | - | 0.58 |

மேற்கண்ட திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டைவிட 0.05 குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.ராஜேந்திரன், ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று உடன் பணி உத்தரவு வழங்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கு, பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் |
|---|---|---|

ந.க.எண். 4853/2023/இ1-3

தீர்மானம் எண்.337

அ.கு. பதிவு செய்யப்பட்டது.

31.12.2024

**பொருள் எண்.18**

நாகப்பட்டினம் நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2024-25-ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 2777/2024/சி6, நாள் 28.11.2024ல் நிர்வாக அனுமதி மற்றும் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து கீழ்கண்ட பணிகளுக்கு 18.12.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு

| வ, எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1. | நாகப்பட்டினம் நகராட்சி, நாகூர் வார்டு எண். 1, மாணிக்கம் செட்டியார் தொடக்கப்பள்ளி வளாகத்தில் அங்கன்வாடி மையம் கட்டிடம் கட்டுதல் பணி. | 15.00 | ஜி.தேவராஜ், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | 0.04 | - |
| | | | கே.கோபால கிருஷ்ணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | - | 1.69 |

மேற்கண்ட திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டைவிட 0.04 குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள " திரு. ஜி.தேவராஜ், ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று உடன் பணி உத்தரவு வழங்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கு, பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் |
|---|---|---|

ந.க.எண். 4369/2023/இ1-1,

தீர்மானம் எண்.338

அ.கு. பதிவு செய்யப்பட்டது.

.

31.12.2024

**பொருள் எண்.19**

நாகப்பட்டினம் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் கணனி மற்றும் இதர சாதனங்களை யூபிஎஸ் உடன் இணைக்கப்பட்டுள்ள பேட்டரிகள் பழுதுடைந்துள்ளதனை புதியதாக மாற்றி அமைப்பதற்கு 20.12.2024 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களில் இருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு,,

தீர்மானம் எண்.339

அ.கு. அனுமதிக்கப்பட்டது

| வ. எண் | பணிமனை நிறுவனங்களின் விவரம் | வழங்கப்பட்டத் தொகை (வரிகள் உட்பட) ரூ. |
|---|---|---|
| 01. | HI-TEK POWER CONTROLS, Tiruvarur. | 140000 |
| 02. | SCS ENERGY, Tiruvarur. | 145000 |
| 03. | HI-TEK SOLAR ENERGY, Tiruvarur. | 147500 |

மேற்படி நிறுவனங்களிலிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள HI-TEK POWER CONTROLS, Tiruvarur நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர்செய்யும் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள தில்லை எண்டர்பிரைசஸ், நாகப்பட்டினம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம் |
| | 3 | மேற்கண்ட பணியானது அலுவலக பணிகள் பாதிக்காத வகையிலும் மற்றும் கணனி சாதகனங்களின் பாதுகாப்பு நலன் கருதியும் உடன் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |

ந.க.எண். 2064/2024/இ1

31.12.2024

**பொருள் எண்.20**

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நாகூர் நுண்ணுரம் செயலாக்கம் மையம் (5TPD), அரசு மருத்துவமனை பின்புறம் (5TPD) நுண்ணுரம் செயலாக்கம் மையம் மற்றும் நாகப்பட்டினம் உரக்கிடங்கில் உள்ள நுண்ணுரம் செயலாக்கம் மையம் (4TPD) ஆகிய இடங்களில் நுண்உரமாக மாற்றும் (செயலாக்கம்) பணியில் இயங்கி வரும் இயந்திரங்களின் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர்செய்யும் பணிகள் மேற்கொள்வதற்கு உள்ளூரில் உரிய பணிமனைகள் இல்லாத காரணத்தினால் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு 20.12.2024 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு,, மேற்படி நிறுவனங்களிலிருந்து வரபெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s MRR Suppliers , Govt, Supply Contractors (SSI REGN.) No: 207, Strahans Road, Pattalam, Chennai நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் விவரம் | வழுங்கப்பட்ட விலைப்புள்ளி தொகை ரூ. (வரிகள் உட்பட) |
|---|---|---|
| 01. | M/s. SB&Co., Govt., Supply Contractors (SSI REGN), No: 115/90B 2nd FLOOR, Perambur High Road, Perambur, Chennai. 600-011. | 305000/- |
| 02. | M/s SRM Enterprises Manpower supply & Govt Contractoer No.67 Mahalakshmi Nagar 5th Cross Poonamallee, Chennai-56. | 320000/- |
| 03. | M/s MRR Suppliers, Govt,Supply Contractors (SSI REGN.) No: 207, Strahans Road, Pattalam, Chennai-600 012. | 298540/- |

| அலுவலக குறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழுங்கலாம் |
| | 2 | மேற்கண்ட திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு விலைப்புள்ளி கோரப்பட்டதற்கும் மற்றும் பணியினை உடன் மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் அனுமதி வழுங்கலாம் |
| | 3 | மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம் |

தீர்மானம் எண்.340

அ.கு.

அனுமதிக்கப்பட்டது

ந.க.எண். 79 /2024/ இ1

31.12.2024

**பொருள் எண்.21**

தீர்மானம் எண்.341
அ.கு. பதிவு செய்யப்பட்டது.

நாகப்பட்டினம் நகராட்சிக்கு மாநில நிதிக்குழு பள்ளி மேலாண்மை இயக்குதல் மற்றும் பராமரித்தல் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 2777/2024/சி6, நாள் 28.11.2024ல் நிர்வாக அனுமதி மற்றும் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து கீழ்கண்ட பணிகளுக்கு 18.12.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு..

| வ, எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விலை விகிதம் குறைவு | மதிப்பீட்டு விலை விகிதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1. | நாகப்பட்டினம் நகராட்சி, நாகூர்வார்டு எண்.1, மாணிக்கம் செட்டியார் தொடக்கப்பள்ளிவளாகத்தில் அங்கன்வாடி மையம் கட்டிடம் கட்டுதல் பணி. | 15.00 | ஜி.தேவராஜ், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | 0.04 | - |
| | | | கே.கோபாலகிருஷ்ணன்ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | - | 1.69 |

. மேற்கண்ட திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டைவிட 0.04 குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள " திரு. ஜி.தேவராஜ், ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று உடன் பணி உத்தரவு வழங்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கு, பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் |
|---|---|---|

ந.க.எண். 4369/2023/இ1-1,

31.12.2024

**பொருள் எண்.22**

தீர்மானம் எண்.342
தீர்மாணிக்கப்பட்டது.

**நகர்மன்ற உறுப்பினர் திருமதி,N . அஞ்சலிதேவி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**

04-வது வார்டுகுட்பட்ட மேலபட்டினச்சேரி, சீராளம்மன் கோயில் தென்புற சாலை , மேற்கு வீதி, சீராளம்மான் ஆலயத்திலிருந்து தெற்கு நோக்கி சொல்லும் சாலை மற்றும் மேலப்பட்டினச்சேரியிலிருந்து நாகூர் மீன்பிடி துறைமுகம் செல்லும் பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

| | | |
|---|---|---|
| 31.12.2024 | **பொருள் எண்.23**<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி,N. அஞ்சலிதேவி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>04-வது வார்டுகுட்பட்ட கீழப்பட்டினச்சேரி, தெற்கு தெரு, கீழப்பட்டினச்சேரி நடுத்தெரு ஆகிய சாலைகள் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு போடப்பட்டுள்ளது. இரண்டு சாலைகளும் சேதமுற்றுள்ளதால் மேற்படி சாலைகளை தார் சாலையாகவும் கீழ்பட்டினச்சேரி வடக்கு தெரு சிமெண்ட் சாலையாக அமைத்து தரவும் இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.343<br>தீர்மாணிக்கப்பட்டது. |
| 31.12.2024 | **பொருள் எண்.24**<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி,N. அஞ்சலிதேவி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>04-வது வார்டுகுட்பட்ட காட்டுப்பள்ளி குளத்தெருவில் உள்ள காட்டுப்பள்ளிக்கு மியாத்தெரு மற்றும் காட்டுப்பள்ளி தெரு ஆகிய பகுதியில் உள்ள இஸ்லாமிய மக்கள் தொழுகைக்கு செல்வதால் மின்சாரம் வசதி இல்லாமல் மிகுந்த இன்னலுக்கு ஆளாகின்றன, எனவே காட்டுப்பள்ளி குளத்தெருவிற்கு புதிய மின்கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.344<br>தீர்மாணிக்கப்பட்டது. |
| 31.12.2024 | **பொருள் எண்.25**<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி.க.சுந்தரேஸ்வரி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>20-வது வார்டுகுட்பட்ட சுப்பா முதலியார் தெரு, பெருமாள் கீழவீதி இணைப்பு சாலை, சிவன் தெற்கு வீதி, சலவை குளம் மேல்கரை மற்றும் வீரிக்குளம் சந்து ஆகிய தெருக்களுக்கு மின்கம்பம் மற்றும் மின் விளக்கு அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.345<br>தீர்மாணிக்கப்பட்டது. |
| 31.12.2024 | **பொருள் எண்.26**<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி.க.சுந்தரேஸ்வரி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>20-வது வார்டுகுட்பட்ட அகத்தீஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான குளத்தில் உள்ள ஆகாயத் தாமரையை அகற்றியும், குளத்தை தூர்வாரியும் சுற்று சுவர் அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.346<br>தீர்மாணிக்கப்பட்டது. |
| 31.12.2024 | **பொருள் எண்.27**<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி.க.சத்தியவாணி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>➢ 31-வது வார்டுகுட்பட்ட கொத்தான்குளம் மேல்கரை, வடக்கரை ஆகிய பகுதிகளில் இதுநாள் வரை பாதாளசாக்கடை இணைப்பு வழங்கப்படவில்லை, எனவே பாதாளசாக்கடை இணைப்பு அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.347<br>தீர்மாணிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 31.12.2024 | **பொருள் எண்.28**<br>தமிழ்நாடு நகரப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ன் படிநகராட்சி பகுதிகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும்வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட உரிமம் வழங்குவதற்கான நிறுவனங்களின் வகைப்பாட்டினை அட்டவணை I, II, மற்றும் III-ல் வகைப்படுத்தி குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச கட்டணங்களின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தகுந்தார் போல் நிர்ணயம் செய்து உரிமம் வசூலித்து உரிமம் வழங்கிட வேண்டியுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023-ல் தொழில் உரிமங்கள் வழங்குவது குறித்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் மண்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு நகர்மன்ற கூட்ட தீர்மானம் எண்.161/ நாள்.28.06.2024-ன்படி மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது, தற்போது உபவிதிகள் உருவாக்கி தொழில் உரிமம் கட்டணம் நிர்ணயம் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ஒப்புதல் பெறவும் ஒப்புதல் பெற்ற பின்பு மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிடவும் ஏதுவாக தற்சமயம்<br>சில திருத்தங்கள் செய்து கீழ்கண்டவாறு விளக்கமான விவரத்துடன் தயார் செய்யப்பட்டுள்ளது. இதன்படி இந்நகராட்சி பகுதியில் இயங்கி வரும் தொழில்களுக்கு பின்வரும் விவரப்படி உரிமக் கட்டணம் 01.04.2025-ஆம் தேதி முதல் நிர்ணயம் செய்து தொழில் உரிமம் வழங்கிட மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம்**<br>வர்த்தக உரிமத்திற்கான விண்ணப்பம் - (1) அட்டவணைகள் I, II, III –ல் குறிப்பிடப்பட்டுள்ள, பொது அல்லது தனியார் என, எந்தவொரு வர்த்தகம் அல்லது வியாபாரத்தினையும், ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒரு உரிமமின்றி நகராட்சி எல்லைக்குள் எவரும் மேற்கொள்ளக் கூடாது. அத்தகைய உரிமம் வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் நாகப்பட்டினம் நகராட்சி நகர் மன்றத்தால் வரையறுக்கப்பட்ட கட்டணத்துடன் படிவம் 1 – இல் ஆணையாளருக்கு சமர்பிக்கப்பட வேண்டும் மற்றும் பின்வரும் ஆவணங்கள் அத்துடன் இணைக்கப்பட வேண்டும்.தனிநபரைப் பொறுத்தவரையில் ஆதார் அட்டை மற்றும் நபர்களின் குழு அல்லது நிறுவனத்தினைப் பொறுத்தவரையில் நிலையான கணக்கு எண் அட்டை அல்லது கூட்டுரும சான்றிதழ் போன்ற அடையாள சான்று. உரிமம் விண்ணப்பிக்கப்படுகிற வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் முகவரியை தெளிவாக காண்பிக்கும் குத்தகை பத்திரம் அல்லது வருமானம் ஒப்பந்தம் அல்லது சமீபத்திய சொத்து வரி ரசீது அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.செல்லுபடியாகக் கூடிய முகவரிச்சான்று எதுவும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர் படிவம் -17 இல் பிரமாணம் | தீர்மானம் எண்.348<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ன்படி தொழில் உரிமம் Trade License Fees) கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை மன்றம் பதிவு செய்யலாம். |
| 2 | மேற்கண்ட விபரப்படி உப விதிகள் உருவாக்கி தொழில் உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ஒப்புதல் பெற மன்றம் அனுதிக்கலாம் |
| 3 | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ஒப்புதல் பெற்ற பின்பு மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிடவும் மன்றம் அனுமதிக்கலாம் |
| 4 | அரசிதழில் வெளியிட ஆகும் செலவினத்திற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம் |

ந.க.எண். 4190/2024/எச்1

31.12.2024

**பொருள் எண்.29**

நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு TN- 51 AD-3461 வாகனத்திற்கு புதியதாக பேட்டரி விநியோகம் செய்வதற்கு 13.12.2024 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களில் இருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | பணிமனை நிறுவனங்களின் விவரம் | வழங்கப்பட்டத் தொகை ரூ |
|---|---|---|
| 1 | தில்லை எண்டர்பிரைசஸ் நாகப்பட்டினம் | 7700/- |
| 2 | மகா ஆட்டோ எலக்ட்ரிக்கல் அண்ட்பேட்டரி ஒர்க்ஸ், நாகப்பட்டினம். | 8100/- |
| 3 | கணேஷ் எண்டர்பிரைசஸ் , நாகப்பட்டினம் | 8400/- |

மேற்படி நிறுவனங்களிலிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள தில்லை எண்டர்பிரைசஸ் நாகப்பட்டினம், நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர்செய்யும் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள தில்லை எண்டர்பிரைசஸ் நாகப்பட்டினம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம். |

ந.க.எண். 4042/2024/இ2

தீர்மானம் எண்.349
அ.கு,
அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 31.12.2024 | **பொருள் எண்.30**<br><br>**நகர்மன்ற உறுப்பினர் திரு . மு.பரணிகுமார் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br><br>➢ 33-வது வார்டுகுட்பட்ட நடராஜன்பிள்ளைத்தெருவில் பொது கழிப்பிடம் முற்றிலும் பழுதடைந்துள்ளதால் புதிய கட்டிடம் அமைத்து தரவும்,<br>➢ நியூ ஆர்ச் தெரு திடீர் குப்பம் பகுதியில் உள்ள கழிப்பிடம் பராமரிப்பு இல்லாமல் இருக்கிறது அதனை சரி செய்து தரவும்,<br>➢ அக்கரைக்குளம் தென்கரை பகுதியில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தின் பழுதுகளை சரி செய்த தரவும்,<br>➢ கஞ்சாப்பள்ளி சுடுகாட்டை பராமரிப்பு செய்து தரவும்,<br>➢ மேலகோட்டைவாசல் நகராட்சி பூங்கா பரிமரிப்பு இன்றியுள்ளதை பராமரிப்பு செய்து தரவும் இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.350<br>தீர்மாணிக்கப்பட்டது. |

/உண்மை நகல்/

(ஒம்) இரா,மாரிமுத்து

நகர்மன்ற தலைவர்